**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 05.03.2026**
**OS. No. 186/2021**
**வழக்கு சாட்சி DW.2–பெருமாள் , த/பெ.கேசவன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி தாவா சொத்து அவருக்கு தான் சொந்தம் என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் பாதி பாதி பங்கு உள்ளது, பிரதிவாதிகள் தாவா சொத்திலுள்ள வீட்டில் ஒரு பகுதியில் குடியுள்ளார்கள். பிரதிவாதிகளே இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி பெங்களூரில் குடியிருப்பதாக சொல்லிவிட்டு, நிரூபண வாக்குமூலத்தில கோயம்புத்தூரில் குடியுள்ளதாக சொல்லியுள்ள நிலையிலும், வசிப்பிடத்திற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாத நிலையிலும் நான் அவர்களுக்கு ஆதரவாக தாவா சொத்தில் குடியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகள் அனைவரும் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) வாதி மற்றும் அவரது அண்ணன் இருக்கும்போது அவர்களிடம் நான் தறி ஓட்டியுள்ளேன். 1ம் பிரதிவாதி ஊருக்கு வந்தால் எங்கள் வீட்டில் தான் தங்குவார் என்றால் எங்கள் வீட்டிலும் தங்குவார், உறவினர்கள் வீடும் அருகில் உள்ளது அங்கும் தங்குவார். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டின் அனுபவத்தில் இருந்தால் அங்கு தான் தங்குவார் என்றும், எங்கள் வீட்டிலும், அவரது உறவினர்கள் வீட்டிலும் தங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கும், எனக்கும் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. வாதி எனது எதிர்த்த வீட்டுக்காரர் என்பதால் அவருக்கும், எனக்கும் அவ்வப்போது சண்டை ஏற்படும் என்றும், அதனால் அதை மனதில் வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) 1ம் பிரதிவாதி சாந்தியின் இறந்துபோன கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும், அவர் பெங்களூரில் தான் குடியிருந்தார் என்றும், அதனால் சொத்து

வாங்கியது விற்றது தொடர்பாக என்னிடம் தெரிவிக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளார். 1ம் பிரதிவாதியின் மகள்கள் பிரதிவாதிகளாக உள்ளபோது அவர்களே சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றும், அவர்களுக்காக நான் சாட்சியம் அளிப்பது அதனால் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் அவ்வப்போது பெங்களூர் சென்று வருவார். வாதி முதலில் 3 தறிகள் வைத்திருந்தார், தற்போது இரண்டு உள்ளது. முதலில் 1ம் பிரதிவாதியின் கணவர் சண்முகத்திடம் தறி ஓட்டிவந்தேன். அவர் உடல்நிலை சரியில்லாமல் அதை நிறுத்திவிட்டதால், வாதியிடம் ஓட்ட வந்தேன்.

4) வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏதுவும் இ ல்லை வழக்கு இருப்பதாக 1ம் பிரதிவாதி தெரிவித்தார். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சண்டை ஏற்பட்டு காவல் நிலையம் சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதி சொல்லி தெரியும். எதிர்த்த வீட்டில் இருந்தபோதும் எனக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்றும், 1ம் பிரதிவாதி சொல்லிகொடுத்ததை தற்போது சாட்சியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கை பற்றியும், பிரச்சனை குறித்தும், பிரதிவாதிகள் எங்கு குடியுள்ளார்கள் என்பது குறித்தும் எனக்கு எதுவும் தெரியவில்லை என்றும் பிரதிவாதிகள் சொல்லிகொடுத்ததன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.